**செய்தி வெளியீடு எண்: 23/2024** **நாள்: 02.02.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**மின்னணு வர்த்தகத்திற்கான திறந்த நெட்வொர்க்கில் மெட்ரோ இரயில் பயணச்சீட்டு பெறும் வசதியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.மு.அ.சித்திக் அறிமுகப்படுத்தினார்**

சென்னை, நந்தனம், மெட்ரோஸில் இன்று (02.02.2024) ONDC நெட்வொர்க் உடன் இணைந்து மெட்ரோ இரயில் பயணத்திற்கான பயணச்சீட்டு பெறும் வசதியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர் திரு.அ.சண்முகசுந்தரம், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), ஆலோசகர் திரு.கே.ஏ.மனோகரன் (தானியங்கி கட்டண வசூல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பம்), சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்தின் சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார், ONDC நெட்வொர்க்கின் தலைமை வணிக அதிகாரி திரு.ஷிரீஷ் ஜோஷி, மூத்த துணைத் தலைவர் திரு.நிதின் நாயர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இந்தியாவில் முதல் மெட்ரோ இரயில் சேவையாக ONDC நெட்வொர்க்கில் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். இதன் மூலம் மெட்ரோ பயணிகள் தங்களின் மெட்ரோ பயணச்சீட்டுகளை ONDC நெட்வொர்க்கில் இருந்து நேரடியாக பதிவு செய்ய முடியும்.

பிப்ரவரி 2, 2024 முதல், ONDC நெட்வொர்க்கில் இணைந்துள்ள Rapido, Namma Yatri மற்றும் redBus போன்ற நிறுவனங்களின் செயலி மூலம் மெட்ரோ பயணிகள் ஒருவழிப் பயணத்திற்கும், திரும்பிவரும் பயணத்திற்குமான மெட்ரோ இரயில் பயணச்சீட்டுகளை சிரமமின்றி வாங்கலாம். கூடுதலாக, Google Maps மற்றும் PhonePe ஆகியவை ONDC நெட்வொர்க்கில் விரைவில் இணைந்து இந்த சேவைகளை வழங்க முடியும், இது வாடிக்கையாளர்களின் வசதி மற்றும் விருப்பத்தை மேலும் மேம்படுத்துகிறது. மேலும், ONDC நெட்வொர்க்கில் எந்த மெட்ரோவிற்கும் மெட்ரோ பயணச்சீட்டை உடனடியாக வாங்க முடியும்.

ONDC நெட்வொர்க்கில் மெட்ரோ சேவைகளின் ஒருங்கிணைப்பு டிஜிட்டல் மொபிலிட்டியில் ஒரு புதிய சகாப்தத்தை முன்னறிவிக்கிறது, முக்கிய நகரங்களில் பொதுப் போக்குவரத்திற்கு தடையற்ற அணுகலுக்கு உறுதியளிக்கிறது. சென்னையைத் தொடர்ந்து, கொச்சி மெட்ரோ, கான்பூர் மெட்ரோ, புனே மெட்ரோ மற்றும் பிற மெட்ரோ சேவைகள் ONDC நெட்வொர்க்கில் சேர தயாராக உள்ளன, இதனால் மில்லியன் கணக்கான பயணிகளுக்கு நகர்ப்புற போக்குவரத்தை அணுகுவது எளிமையாக அமையும்.

இந்த முன்முயற்சி பயணச்சீட்டு வாங்கும் செயல்முறையை எளிதாக்குவது மட்டுமல்லாமல், ஒரு முழுமையான, பலதரப்பட்ட போக்குவரத்து

அனுபவத்திற்கும் வழி வகுக்கிறது. ONDC நெட்வொர்க்கில் கிடைக்கும் மெட்ரோ மற்றும் பிற போக்குவரத்து முறைகள் மூலம், பயனர்கள் இணைப்பு சேவை வசதிகளான ஆட்டோ போன்ற பல்வேறு போக்குவரத்து முறைகளை இணைத்து தடையற்ற பயணத்தை அனுபவிக்க முடியும். எடுத்துக்காட்டாக, தினசரி பயணத்தில் பைக், மெட்ரோ மற்றும் ஆட்டோ சவாரி ஆகியவற்றை ஒரே செயலியில் முன்பதிவு செய்யலாம்.

கூடுதலாக, ONDC நெட்வொர்க் புதுமையான தொகுப்பை ஆதரிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. பயணிகளின் வசதிக்காக மளிகைப் பொருட்கள் மற்றும் ஷாப்பிங் போன்ற துணை சேவைகளை பயணத்தின் போது வழங்கி நேரத்தை மிச்சப்படுத்தவும் உதவும். மேலும், ONDC நெட்வொர்க்கில் இதர மெட்ரோக்கள் மற்றும் பிற நிறுவனங்களின் செயலிகளும் இணைக்கப்பட்டு நகர்ப்புற போக்குவரத்துத்திறன் எதிர்காலத்தை உள்ளடக்கியதாகவும், அணுகக்கூடியதாகவும், புதுமையானதாகவும் இருப்பதை உறுதிசெய்கிறது.

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., கூறியதாவது**, “ONDC உடன் இணைந்து செயல்படுவதன் மூலம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் பயணச்சீட்டு பயன்பாட்டு சேவைக்கான அணுகலை முழுவதுமாக அளிக்க முடிகிறது மற்றும் பல்வேறு வகையான செயலி தயாரிப்பவர்களும் தங்கள் செயலியை சென்னை மெட்ரோ இரயில் பயணச்சீட்டு அமைப்புடன் ஒருங்கிணைக்க அனுமதிக்கிறது. நிச்சயமாக, மற்ற மெட்ரோ இரயில் நிறுவனங்கள், பெருநகர போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் இதர போக்குவரத்து நிறுவனங்களும் விரைவில் ONDC நெட்வொர்க்குடன் இணைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. ஒவ்வொரு போக்குவரத்து அமைப்பும் தனித்தனி இடைமுகத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைத் தவிர்த்து ONDC நெட்வொர்க்கில் அதிகமான செயலி மேம்பாட்டாளர்களும் இணைந்து, ஒருங்கிணைந்த போக்குவரத்து தீர்வுகளில் புதுமைகளை வளர்ப்பதை நாங்கள் எதிர்நோக்குகிறோம்’’.

**ONDC நெட்வொர்க்கின் மேலாண்மை இயக்குநர் திரு.டி.கோஷி, கூறியதாவது**, "ONDC நெட்வொர்க்கில், நாங்கள் புதுமைகளை ஏற்றுக்கொள்வதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். சென்னை மெட்ரோ ONDC நெட்வொர்க்கில் இணைவதால், இது ஒரு வளர்ச்சிக்கட்டம் மட்டுமல்ல, போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்தும் ஒரு தைரியமான முன்னேற்றமாகும். இது வெறும் பயணச்சீட்டுகளைப் பற்றியது அல்ல; இது பயணிகளுக்கான முழு அளவிலான சாத்தியக்கூறுகளை திறப்பது பற்றியது. பலவகை ஒருங்கிணைப்பிலிருந்து துணை சேவைகளின் தடையற்ற கலவை வரை, போக்குவரத்துத்திறனை மறுவரையறை செய்ய ONDC தயாராக உள்ளது’’.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**